முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி

**O.S.No. 197/2014**

20.04.2026 வா.சா.1 திரு. அய்யாத்துரை

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் கிரையம் வாங்கிய சொத்தின் சர்வே எண். 71/1A1 ன் 3 ஏக்கர் 85 செண்டில் 9 ½ செண்ட் என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். 9 ½ செண்ட் ஆனது மேற்படி சர்வே எண்ணில் எந்த திசையில் அமைந்துள்ளது என்று குறிப்பிட்டு கிரைய பத்திரத்தில் காட்டப்படவில்லை என்று சொன்னால் சரிதான். மேற்படி 9 ½ செண்ட் சர்வே வரைபடத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்யாமல் தாக்கல் செய்துள்ளதாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.
2. நான் வழக்கறிஞர் மூலம் தயார் செய்யப்பட்ட மாதிரி வரைபடத்தை மட்டும் தான் தாக்கல் செய்துள்ளேன் என்றும் மேற்படி வரைபடத்தில் அளவுகள் காட்டப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி பிராதில் 9 ½ செண்டின் கிழமேல் அளவும் தென்வடல் அளவும் காட்டவில்லை என்றால் சரிதான். எனது பத்திரத்திலும் கிழமேல் தென்வடல் அளவு சொல்லி எழுதப்படவில்லை என்றால் சரிதான். எல்கை மால்களை மட்டும் தான் குறிப்பிட்டு பத்திரம் எழுதிக் கொடுக்கப்பட்டது.
3. வாசாஆ.1 ல் சொத்து விவரத்தில் ஏக்கர் 3 செண்ட் 85 ல் பிளாட் 25 ம் தெருவும் கழித்து என்ற காட்டப்பட்டுள்ளது என்பதற்கு என்ன பொருள் என்றால் பிளாட்டாக பிரித்ததில் 25 ம் பிளாட்டை விட்டு விட்டு மீதீ 9 ½ செண்டை குறிப்பிட்டுள்ளார்கள். வாசாஆ.1 ல் தெற்கு

எல்கையாக நெசவாளர் இடம் என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்கே நெசவாளர் காலனி என காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாசாஆ.1 ஆவணத்திலும் சொத்தின் அளவுகள் காட்டப்படவில்லை என்றால் சரிதான் மொத்த அளவாக தான் காட்டப்பட்டுள்ளது. 3 ஏக்கர் 85 செண்டிற்கு பிளாட் போடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி 3 ஏக்கர் 82 செண்டிற்கான லேஅவுட் வரைபடத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் வழக்கறிஞரை கேட்டால் தான் தெரியும்.

4. என் பெயரில் உள்ள கிரைய பத்திரத்திற்கு மூல பத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் சொசைட்டி சம்பந்தமான ஆவணங்களை பார்த்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் எத்தனை செண்டிற்கு தாவா உள்ளது என்றால் 1 செண்டிற்கு தாவா உள்ளது. பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். மேற்படி எதிர் வழக்குரையில் பிரதிவாதிகள் பரிகாரம் கேட்டு எதிர் கோரிக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.
5. பிரதிவாதிகள் 3 செண்ட் இடத்தை நான் ஆக்கிரமிப்பு செய்ததாகவும் அதை அகற்ற கோரி பரிகாரம் கேட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரிதான். என் இடத்தில் ஆக்கிரமிப்பு உள்ளதாக நான் சொல்வதை காட்டுவதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய கோரி மனு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்., மாதிரி வரைபடத்திலும் எல்கைமால்களை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான்.
6. நான் சர்வேயரை வைத்து தபசில் சொத்தை அளந்து அறிக்கை வைத்துள்ளேனா என்றால் இல்லை. சொசைட்டி 1983 ல் வாங்கிய கிரைய பத்திரத்தை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து

பார்த்தேன். மேற்படி கிரைய பத்திரத்தில் கண்ட சொத்து 71/1A2 உட்பிரிவு செய்யப்பட்டு தனி பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னுடைய சொத்திற்கு தனி பட்டா இல்லை என்றால் சரிதான் கூட்டு பட்டா தான் உள்ளது.

7. வி.ஏ.ஓ. சிவசுப்பிரமணியன் என்பவரை எனக்கு எவ்வளவு காலம் தெரியும் என்றால் 1990 வாக்கில் நான்கு ஆண்டு காலம் தெரியும். தபசில் சொத்தில் கட்டிடம் கட்டப்பட்டதற்காக ஏதேனும் கட்டிட அனுமதி பெற்றுள்ளேனா என்றால் இல்லை. தீர்வை ரசீது மட்டும் செலுத்தியுள்ளேன். 3 ஏக்கர் 85 செண்ட் பிளாட் மனையாக பிரிக்கப்பட்டுள்ளது என்ற விவரத்தை பிராதில் சொல்லவில்லை என்றால் சரிதான். வி.ஏ.ஓ. கொடுத்த சான்றிதழில் பிளாட்டை பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். வி.ஏ.ஓ சான்றிதழில் நான் கிரையம் பெற்ற 9 ½ செண்ட் பற்றி சொல்லவில்லை என்றால் சரிதான். வி.ஏ.ஓ கொடுத்த சான்று சட்டப்படி செல்லாது என்றும் அவர் எனக்கு வேண்டியவர் என்பதால் அவரிடம் சான்று வாங்கி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தெரிவித்துள்ள லேஅவுட் பெயர் என்ன என்றால் நெசவாளர் காலனி.

8. வாசாஆ. 11ல் கண்ட புகைபடத்தில் உள்ள கட்டிடமானது எங்கள் இடத்தில் உள்ளது என்றால் சரிதான். நான் தொழில் எதுவும் செய்கிறேனா என்றால் பலசர கடை வைத்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள கூட்டு பட்டாவில் 55 நபர்கள் பெயர் உள்ளது என்றால் சரிதான். நான் சொசைட்டி இடத்தை ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

9. என்னுடைய பத்திரத்து படி 3 ஏக்கர் 85 செண்டில் 9 ½ செண்ட் நிர்ணயம் செய்யாமல் வெறுமனே 9 ½ செண்ட் இடம் என பொது

வாக காட்டப்பட்டுள்ளதால் அதன் அடிப்படையில் பிரதிவாதிகள் இடத்தை வேண்டுமென்றே ஆக்கிரமிப்பு செய்து வைத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய பத்திரத்தில் அளவுகள் குறிப்பிடவில்லை என்பதால் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

10. நான் தாக்கல் செய்துள்ள மாதிரி வரைபடம் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றும் அதில் எல்கைமால் அளவுகள் சொல்லப்பட்டதால் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எதிர் வழக்குரையில் கோரியிலுள்ள எதிர் கோரியும் கண்ட பரிகாரம் அவர்களுக்கு கிடைத்தக்கது என்றால் சரியல்ல.

11. எனக்கு கிரையம் கொடுத்த நபருக்கே சொத்தில் உரிமை இல்லை என்பதால் நான் மூலபத்திரத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனக்கு கொடுத்த கிரைய பத்திரத்தின் அடிப்படையில் நான் தாக்கல் செய்த வழக்கு செல்லதக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சொசைட்டி நெசவாளர்கள் வளர்ச்சி மற்றும் தொழில் விரிவாக்கத்திற்காக ஏற்பட்டது என்றால் தெரியாது.

12. நான் கோரிய பரிகாரம் எனக்கு கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 20.04.2026
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2026.04.20 16:18:42 +0530

Principal District Munsif,

Tirunelveli.